Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 68/2020**

**Deposition of PW.1 (LW.4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேர்வராயன் | ஜாதி | : | |
| த/பெ | : | பெருமாள் | தொழில் | : | வனச்சரக அலுவலர் (ஓய்வு) |
| கிராமம் | : | கடமலைக்குண்டு, மேலப்பட்டி கிராமம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆண்டிபட்டி தாலுகா, தேனி மாவட்டம் | வயது | : | 66/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2025.

(7வது எதிரி ஆஜர். 1 முதல் 5 மற்றும் 9, 10, 11, 14 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. 6, 8, 12, 13 எதிரிகள் இறந்துவிட்டார்கள்)

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு அரசு வனத்துறையில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து , பணி ஓய்வு பெற்று தற்சமயம் ஆண்டிபட்டி தாலுகாவில் குடியிருந்து வருகிறேன். கடந்த 27.02.2004 ஆம் தேதி நான் கன்னிவாடி வனச்சரகம், கன்னிவாடி பீட்டில் வனக்காப்பாளரகா பணிபுரிந்து வந்தேன். 27.02.2004 ஆம் தேதி கன்னிவாடியில் குடியிருக்கும் லேட். திருமலைச்சாமி மகன் ராஜாராம் என்பவர் முன்பகல் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு வந்து கன்னிவாடி வனச்சரகர் அவர்களை சந்தித்து தமக்கு தோணி மலை பகுதியில் பட்டா நிலம் உள்ளதாகவும், அந்த பட்டா நிலத்தில் இயற்கையாக வளர்ந்த தோதகத்தி மரமும், எங்களால் நடவு செய்யப்பட்ட பலா, மிளகு, எலுமிச்சை போன்ற மரப்பயிர்களும் உள்ளதாகவும், இந்த நிலத்தில் இயற்கையாக வளர்ந்த தோதகத்தி மரத்தை அடையாளம் தெரியாத சிலர் வெட்டி சாய்த்து அறுத்துக்கொண்டிருப்பதாக எனது தோட்ட காவலர் தெய்வேந்திரன் என்பவர் எனக்கு தகவல் கொடுத்ததன் பேரில் மேற்படி இடத்தை தணிக்கை செய்து எதிரிகளை பிடித்து நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனு கொடுத்ததன் பேரில் வனச்சரக அலுவலர் அவர்கள் உத்தரவின் பேரில் கன்னிவாடி பிரிவு வனவர் பிச்சை அவர்கள் தலைமையில் கன்னிவாடி வனச்சரகத்திற்கு உட்பட்ட வனப்பணியாளர்கள் செம்பட்டி பிரிவு வனவர் மகேந்திரன், கன்னிவாடி பீட் வனக்காவலர் சாமிக்கண்ணு, அரசமரத்துப்பட்டி பீட் வனக்காவலர் வில்லியம் பிரான்சிஸ், கோட்டைவெளி பீட் வனக்காப்பளார் அப்பச்சி, செங்கட்டாபட்டி பீட் வனக்காப்பளார் ஞானபாலமுருகன், சித்தையன்கோட்டை பீட் வனக்காப்பளார் ராஜாராம், அரசமரத்துப்பட்டி பீட் வனக்காப்பளார் சின்னச்சாமி, நில உரிமையாளர் ராஜாராம், அவரது தோட்ட காவலர் தெய்வேந்திரன் மற்றும் கன்னிவாடி பீட் வனக்காப்பளார் சேர்வராயன் ஆகிய நான் ஆகியோர் நில உரிமையாளர் புகார் மனு கொடுத்த இடத்தை பார்த்தபோது இயற்கையாக வளர்ந்த தோதகத்தி மரங்களை ஒரு கும்பல் வெட்டி

சாய்த்து அறுத்து துண்டாக்கி கொண்டிருப்பதை பார்த்து தனி குழுவினர் அங்கிருந்த 7 நபர்களை மடக்கி பிடித்து அவர்களிடம் ஊர், பெயர் விசாரித்து மாலை சுமார் 05.00 மணியளவில் 4வது எதிரியான ஆரோக்கியம் என்பவரிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மற்ற எதிரிகளிடம் தனி குழுவில் வந்த பணியாளர்கள் தனி தனியாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள். அங்கு வெட்டப்பட்டிருந்த தோதகத்தி மரத்தினை செம்பட்டி பிரிவு வனவர் மகேந்திரன் என்பவர் அளவுகள் எடுக்க, கன்னிவாடி வனவர் பிச்சை அதை பதிவு செய்தார். அந்த மரக்கட்டைகளுக்கு கன்னிவாடி பீட் வனக்காப்பளார் சாமிக்கண்ணு வரிசை எண் கொடுத்தார். சம்பவ இடத்தில் கன்னிவாடி பிரிவு வனவர் பிச்சை பார்வைமகசர் தயார் செய்தார். அந்த பார்வைமகசரில் தனிக்குழுவில் சென்ற மேற்சொன்ன அனைவரும் கையொப்பம் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வைமகரில் உள்ள சேர்வராயன், வனக்காப்பாளர், கன்னிவாடி பீட் என்ற கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் **(அ.சா.ஆ.2/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் ஹெச் நமுனா என்னால் தயார் செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஹெச் நமுனா நான் தயார் செய்தது தான். அந்த H நமுனா **(அ.சா.ஆ.3/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் பிடிப்பொருட்களான இரண்டு ரம்பங்கள், இரண்டு கோடாரிகள், ஒரு வெட்டருவாள் கைப்பற்றி பூர்த்தி செய்யப்பட்டது. கன்னிவாடி வனச்சரக அலுவலர் உத்தரவின் படி சம்பவ இடத்தில் இருந்த 28 தோதகத்தி சதிர்ப்பு கட்டைகளையும், இரண்டு உருட்டு கட்டைகளையும் சம்பவ இடத்திலேயே நில உரிமையாளரிடம் ஒப்படைத்து, தனிதாளில் ஒப்புதல் பெறப்பட்டது. அந்த ஒப்புதல் கடிதம் **(அ.சா.ஆ.4/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிடிபொருட்களையும், எதிரிகளையும் கன்னிவாடி வனச்சரக அலுவலகம் கொண்டு வந்து, வனச்சரக அலுவலர் முன்பு ஆஜர்படுத்தி, H நமுனாவில் கன்னிவாடி, சிரங்காடு கிராம நிர்வாக அலுவலக உதவியாளர் தண்டாபணி என்பவரிடம் இரவு சுமார் 09.00 மணிக்கு ஒப்படைத்து, மேல் நடவடிக்கைக்காக திரும்ப பெறப்பட்டது. பின்னர் வனச்சரக அலுவலர் உத்தரவின் படி இரவு வத்தலகுண்டு அருகில் உள்ள தும்மலபட்டியில் ஒரு எதிரியை கைது செய்து, கன்னிவாடியில் பிரிவு வனவர் பிச்சை தலைமையில் இரவு 10.30 மணிக்கு முனியாண்டி என்ற எதிரியை கைது செய்து, அவரிடம் வில்லியம் பிரான்சிஸ் என்ற வனக்காப்பளார் வாக்குமூலம் பெற்றார். இரவு 11.00 மணியளவில் கன்னிவாடியில்டி உள்ள பாண்டி என்பவரை கைது செய்து அதில் அப்பச்சி என்பவர் வாக்குமூலம் பதிவு செய்தார். மறுநாள் காலை கன்னிவாடி பிரிவு வனவர் தலைமையில் இவ்வழக்கு தொடர்புடைய முருகபாண்டி என்பவரை ஒட்டன்சத்திரத்தில் காலை 08.00 மணிக்கு கைது செய்து கன்னிவாடி வனச்சரக அலுவலம் கொண்டு, வனச்சரகர் முன்பு ஆஜர் படுத்தப்பட்டது. மேற்படி விபரங்களை எனது குற்ற அறிக்கையில் பிரிவு வனவர் மூலமாக வனச்சரக அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் வனச்சர அலுவலர் உத்தரவின் படி 11 எதிரிகளையும் திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.II அவர்கள் முன்பு ஆஜர் படுத்தி படிவம் 95 ஐ பூர்த்தி செய்து சமர்ப்பித்தோம். அந்த படிவம் 95 **(அ.சா.ஆ.5/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் நீதிமன்ற நடுவர் அவர்களின் உத்தரவின் படி 11 நபர்களையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்க உத்தரவை பெற்று எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்ததப்பட்டார்கள். மேற்படி விபரங்களை குற்ற அறிக்கையில் குறிப்பிட்டு வனச்சரக அலுவலருக்கு பிரிவு வனவர் மூலமாக குற்ற அறிக்கை சமர்ப்பித்தோன். பின்னர்

29.02.2004 அன்று வனச்சரக அலுவலர் உத்தரவின் படி எனது பிரிவு வனவர் பிச்சை, எனது பீட் வனக்காப்பளார் சாமிக்கண்ணு, நில உரிமையாளர் ராஜாராம் ஆகியோர் மேற்படி குற்றம் நடந்த இடத்தை மறு தணிக்கை செய்தபோது, அங்கு இரண்டு தோதகத்தி மர துண்டுகளுக்கு வரிசை எண் இடாமல் விடுபட்டிருந்தது. அதற்கு மீண்டும் அளவுகள் எடுக்கப்பட்டு வரிசை எண் கொடுக்கப்பட்டு, வனச்சர அலுவலர் உத்தரவின் படி சம்பவ இடத்திலேயே அந்த இரண்டு தோதகத்தி மர உருட்டுகட்டைகளையும் நில உரிமையாளரிடம் ஒப்படைத்து, தனி தாளிடம் ஒப்புதல் பெறப்பட்டது. அந்த ஒப்புதல் தாள் **(அ.சா.ஆ.6/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் பெறப்பட்ட தாளுடன் குற்ற அறிக்கை பிரிவு வனவர் மூலமாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் கன்னிவாடி Reserved Land, கன்னிவாடி பீட், கோம்பைபட்டி சராகம், மாத்தாங்கரை ஓடை பகுதியை பிரிவு வனவர் பிச்சை, பீட் வனக்காப்பளார் சாமிக்கண்ணு மற்றும் பீட் வனக்காப்பளாராகி நான் ஆகியோர் சுற்றி பார்த்து வந்தபோது, 27.02.2004 அன்று குற்ற சம்பவம் நடந்த இடத்திற்கு கீழ் பகுதியில் ஒரு புதருக்குள் 5 சதிர்ப்பு தோதகத்தி மரக்கட்டைகளை மறைத்து வைத்திருப்பதை 02.05.2004 அன்று பகல் 11.00 மணியளவில் கண்டுபிடித்து அவற்றிற்கு அளவுகள் எடுத்து வரிசை எண் கொடுத்து கன்னிவாடி வனச்சரக அலுவலர் உத்தரவின் படி பிரிவு வனவர், வனக்காப்பாளர், நான் ஆகிய மூவரும் கண்டறியப்பட்ட 5 தோதகத்தி மரக்கட்டைகளை கன்னிவாடி சிரங்காடு கிராம நிர்வாக அலுவல உதவியாளர் தண்டாபணி அவர்களிடம் பிற்பகல் சுமார் 01.00 மணியளவில் ஒப்படைத்து ஒப்புதல் பெற்று, மேல் நடவடிக்கைக்காக திரும்ப பெற்று வனச்சரக அலுவலரிடம் ஒப்படைத்து இது தொடர்பான குற்ற அறிக்கை பிரிவு வனவர் மூலம் என்னால் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த 5 தோதகத்தி மரக்கட்டைகள் தொடர்பாக வனச்சரக அலுவலர் புலனாய்வு மேற்கொண்டு வந்தபோது நீதிமனற் காவலில் இருந்த கைதிகள் பிணையில் விடுவிக்கப்பட்டு நிபந்தனை ஜாமினில் கன்னிவாடி வனச்சர அலுவலகத்திற்கு கையொப்பம் செய்ய வந்தபோது, வனச்சரக அலுவலர் புலன் விசாரணை மேற்கொண்டு 02.05.2004 அன்று கண்டுபிடிக்கப்பட்ட 5 சதிர்ப்பு தோதகத்தி மரங்களை இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட 2வது எதிரி முருகேசன் என்பவர் தான் கைது செய்யப்படுவதற்கு முதல் நாள் மேற்சொன்ன 5 தோதகத்தி மரங்களையும் நான் தான் புதரில் மறைத்து வைத்தேன் என்பதை ஒப்புக்கொண்டு தன் கைப்பூர்வமாக மறு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வனச்சரக அலுவலர், பிரிவு வனவர், பீட் வனக்காப்பாளர், பீட் வனக்காவலர் ஆகியோர் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தார். அதன் அடிப்படையில் 5 தோதகத்தி சதிர்ப்பு கட்டைகள் மேற்படி வழக்கிற்கு சம்மந்தப்பட்டது என்பதை ஊர்ஜிதம் செய்த வன அலுவலர் மேற்படி 5 தோதகத்தி மரக்கட்டைகளை நில உரிமையாரிடம் ஒப்படைத்து, ஒப்புதல் பெற்று அறிக்கை சமர்ப்பிக்க கேட்டுக்கொண்தன் படி மேற்படி 5 கட்டைகளை நில உரிமையாரிடம் ஒப்படைத்து தனி தாளில் ஒப்புதல் பெற்று, எனது குற்ற அறிக்கையுடன் இணைத்து பிரிவு வனவர் மூலமாக வனச்சரக அலுவலரிடம் அறிக்கை சமர்ப்பித்தேன்.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor